8th August 1966]

கேரளாவுக்கு ஏற்றுமதியான அரிசி

*218 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி :
திரு ஏ. குஞ்சன் நாடார் :
திரு வை. சங்கரன் : } கனம் உணவு
அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1965-ம் ஆண்டு நவம்பர் முதல் இன்று வரை கேரளாவுக்கு ஏற்றுமதியான அரிசி என்ன விலைப்படி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது, மாவட்ட வாரியாக?

THE HON. SRI V. RAMAIAH : A statement [a] is placed on the Table of the House.

திரு. வை. சங்கரன்: இதிலே விலை கொடுத்திருக்கிறது. எவ்வளவு அளவு அரிசி போய் இருக்கிறது என்று சொல்ல முடியுமா?

THE HON. SRI V. RAMAIAH : A quantity of 1,29,165 tons of rice was exported to Kerala from 1965 to 3rd May 1966 from various districts.

புலவர் கா. கோவிந்தன்: கொடுக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையில் அந்தந்த மாவட்டங்களின் தொகுப்பு விலை விதங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த விலை மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடுகிறது. தஞ்சாவூர் மாவட்டத்திற்கும், கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் இடையே எடுத்துக்கொண்டால் 7 ரூபாய் வித்தியாசம் இருக்கிறது. தஞ்சாவூரில் 74 ரூபாய் என்றும் கன்னியாகுமரியில் 80.80 ரூபாய் என்றும் இருக்கிறது. இதே மாதிரி உயர்ந்த ரகம் புழுங்கலரிசி, பச்சரிசி நடுத்தர ரகம், புழுங்கலரிசி பச்சரிசி மட்டரகம், புழுங்கலரிசி பச்சரிசி எல்லா ரகங்களிலும் வித்தியாசம் இருக்கிறது. தொகுப்பு விலைகள் எப்படி நிர்ணயிக்கப்படுகின்றன? ஏன் இந்த வித்தியாசங்கள் ஏற்படுகின்றன?

கனம் திரு. வெ. ராமைய்யா: பூல் பிரைஸ் அந்த அந்த மாவட்டத்திலே இருக்கக்கூடிய நிலைமையைப் பொறுத்து, போக்குவரத்திலே உள்ள டிஸ்டன்ஸைப் பொறுத்து நிர்ணயிக்கப்படக்கூடிய விஷயம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: இப்பொழுதும் தொடர்ந்து கேரளாவிற்கு நம்முடைய மாநிலத்திலிருந்து ஏற்றுமதியாகிக் கொண்டிருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமைய்யா: இப்பொழுது அனுப்புவதாகத் தகவல் ஒன்றும் இல்லை.

உணவு தானியக் கட்டுப்பாடு

*219 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உணவுத் தானியங்கள் மீதுள்ள கட்டுப்பாடுகளை நீக்க அரசுக்கு உத்தேசமுண்டா?

(இ) ஆம் என்றால் எப்போது அமல் படுத்தப்படும்?

---

[a] Printed as Appendix III at page 879.